www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2023

**B** பத்தாம் வகுப்பு பதிவு எண்

## தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8x1=8

1. வேர்க்கடலை,மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
   அ) குலைவகை ஆ)மணி வகை இ)கொழுந்து வகை ஈ) இலைவகை
2. முறுக்கு மீசை வந்தார்- இத்தொடருக்கான தொகையின் வகையாது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
   இ) அன்மொழித்தொகை. ஈ) உம்மைத்தொகை
3. 'அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்...'- எனக் குறிப்பிடும் நூல்
   அ) புறநானூறு ஆ) சிலப்பதிகாரம் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை
4. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே-
   அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
   இ பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி
5. 'சிலம்புஅடைந்திருந்த பாக்கம் எய்தி' - என்னும் அடியில் பாக்கம் என்பது
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

*பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.*

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்"

6. எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும்
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
7. செந்தமிழ் என்பது
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை.
8. இப்பாடலின் ஆசிரியர்
   அ) இளங்குமரனார் ஆ) பெருஞ்சித்திரனார் இ) தமிழழகனார் ஈ) பாவாணர்

II. ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5x2=10

*(15ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)*

9. வசன கவிதை-குறிப்பு வரைக
10. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
11. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் நான்கினை எழுதுக
12. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
13. கலைச்சொல் தருக : Tempest , Folk Literature
14. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
15. எப்பொருள் -எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



III. மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. 3x3=9

16. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது- இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க

17. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளரோ" - வினவுவது ஏன்?

18. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

19. கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு

- *இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.*

IV. மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. 3x5=15

20. மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

21. மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

22. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



23. அலைபேசி, தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களில் மூழ்கியிருப்போரை நெறிப்படுத்த நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக.

V. ஒரு வினாவிற்கு மட்டும் விரிவான விடையளி. 1x8=8

24. தமிழின் சொல்வளம் பற்றியும் புதியசொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

25. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

******

Kindly send me your study materials to padasalai.net@gmail.com